## August 26, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அரசுப் படைகளுக்கும், ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிரான ஆயுதக் குழுவினருக்கும் நடந்துவரும் மோதலின் ஒரு பகுதியாக, 1901–ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட, உலகின் உயரமான ரயில் பாலமான கோக்டேக் பாலம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இதற்கு ராணுவமும் ஆயுதக் குழுவும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டிவருகின்றன.
2. குஜராத்தில் நடைபெறும் காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.
3. தீவிர குற்ற வழக்கில் கைதாகி 30 நாள்களுக்குள் ஒருவர் ஜாமீனில் விடுவிக்கப்படாவிட்டால், பிரதமரேயானாலும் அவர் தனது பதவியை ராஜிநாமா செய்வதை அரசமைப்பின் 130-ஆவது திருத்தம் கட்டாயமாக்குகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார்.
4. இந்திய துணை தேர்தல் ஆணையராக ஞானேஷ் பாரதி நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் பிறப்பித்த உத்தரவில் தெரிவித்துள்ளது.
5. பங்களாதேஷ் - அடுத்த ஆண்டு பிப்ரவரி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் அரசிடம் தனது தலைமையிலான இடைக்கால அரசு ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும் என்று அதன் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் உறுதியளித்தார். மாணவர் போராட்டத்தின் மூலம் முந்தைய ஷேக் ஹசீனா அரசு கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து இடைக்கால அரசு அமைக்கப்பட்டது.
6. உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிப்பதற்கு மும்பை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி அலோக் அராதே, பாட்னா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி விபுல் மனுபாய் பஞ்சோலி ஆகியோரின் பெயர்களை மத்திய அரசுக்கு உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்துள்ளது.
    i. இந்த இரண்டு நீதிபதிகளின் பெயர் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டால், 2031-ஆம் ஆண்டு, அக்டோபரில் நீதிபதி ஜயமால்ய பாக்சியின் ஓய்வுக்குப் பிறகு நீதிபதி பஞ்சோலி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பதவியேற்க வாய்ப்புள்ளது. அதேபோன்று இந்த இரண்டுநீதிபதிகளின் நியமனங்களுக்குப்பிறகு, உச்சநீதிமன்றம் அதன் முழு அனு மதிக்கப்பட்ட பலமான 34 நீதிபதிகளின் எண்ணிக்கையை மீண்டும் அடையும்.
7. பாதுகாப்புத் துறையில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியாவும், ஃபிஜியும் தீர்மானித்துள்ளன. இதற்கென ஒரு செயல்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
    i. ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியாவைச் சேர்ப்பதற்கான ஆதரவை ஃபிஜி மீண்டும் உறுதி செய்தது.
    ii. ஃபிஜி நாட்டின் பிரதமராக ரபுகா இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.
    iii. பசிபிக் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த சீனா முயற்சித்துவரும் சூழலில், தெற்கு பசிபிக் நாடான ஃபிஜியுடன்

பாதுகாப்புத் துறை உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்தியா ஒப்பந்தங்களை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

8. நகர்ப்புற அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் (ஆக. 26) தொடங்கி வைக்கிறார்.

திட்டத்தின் பலன்கள் - வகுப்பறைகளில் உன்னிப்பாக பாடங்களைக் கவனிப்பதுடன், அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிப்பதாக ஆய்வு முடிவுகளில் தெரியவந்துள்ளது.

9. ஜம்முவில் பாயும் தாவி நதியில் நீர்வரத்து அதிகரித்ததையடுத்து பாகிஸ்தானுக்கு இந்தியா வெள்ள அபாய முன்னெச்சரிக்கை தகவலை அனுப்பியது.
   i. இமயமலையில் உற்பத்தியாகும் தாவி நதி ஜம்மு பிராந்தியத்தை கடந்து, பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்துக்குள் பாய்ந்து செனாப் நதியுடன் சங்கமிக்கிறது. ஜம்மு-காஷ்மீரில் கடந்த ஒரு வாரத்துக்கு மேல் பெய்துவரும் மழையால் தாவி நதியிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

10. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறைகளில் 2047- ஆம் ஆண்டில் வளர்ந்த பாரதம் என்ற இலக்கை அடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு முதலீடுகளை ஈட்டும் வகையில் ‘இந்திய கடல்சார் வாரம் 2025' என்ற பெயரில் சர்வதேச கடல்சார் உச்சி மாநாடு வரும் அக்.27- ஆம் தேதி மும்பையில் தொடங்கி 5 நாள்கள் நடைபெறுகிறது.